Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 13, 2023

புதன்கிழமை டிசெம்பர் 13, 2023 | ஒளி: 09 கதிர் 148 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

## முட்டை விலை எகிறியது



உள்ளூர் சந்தையில் முட்டை விலை உயர்வால், நுகர்வோர் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

ஹட்டன் பகுதியிலுள்ள முட்டை கடைகளில் சிவப்பு நிற முட்டை ஒன்று சில்லறை விலை 62 ரூபாவாகும்,

தொடர்ச்சி P2



# வடக்கு, கிழக்கில் பொலிஸ் பயங்கரவாதம் "தாண்டவம் ஆடுகின்றது"

- அப்பாவி மக்களின் இயல்பு வாழ்க்கையில் அச்சத்தை உருவாக்காதீர்கள்
- பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த அரசினால் முடியவில்லை

வடக்கு,கிழக்கில் பொலிஸ் பயங்கரவாதம் தாண்டவம் ஆடுகின்றது. பொலிஸ் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்த அரசினால் முடியவில்லை. பொலிஸார் மிலேச்சத்தனமாக செயற்படுகின்றார்கள். ஏன் உங்களுக்கு இவ்வளவு மோசமான இனவாத சிந்தனை? ஏன் நீங்கள் இனவெறியோடு தமிழர்களைப் பார்க்கின்றீர்கள்? இந்த நாடு உங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்றால், தமிழர்களை அழித்து விடுங்கள். அவர்களை தொடர்ந்தும் வஞ்சிக்காதீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பியான எஸ்.ஶ்ரீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2





### கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து

# தப்பியோடிய 102 கைதிகளும் கைது

கனகராசா சரவணன்

வெலிகந்த, கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து தப்பிச்சென்ற 102 கைதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தப்பிச்சென்ற மேலும் 37 கைதிகளைத் தேடும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டிஆரச்சி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அதிகாரிகள் சிலரை சாடினார் ஜனாதிபதி



அமைச்சர்கள் மாத்திரமல்ல ஒருசில அரச அதிகாரிகளும் பணம் சம்பாதிப்பதற்காக முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-

தொடர்ச்சி P2

## போலி ஸ்டிக்கர்: சி.ஐ.டி விசாரணை



அரசாங்கம் இழந்து வந்துள்ள வருமானத்தை உச்ச அளவில் அறவிடும் யுகம் இதுவாகத்தான் இருக்க முடியும். அந்தவகையில் மதுபான போத்தலில் போலி ஸ்டிக்கர் விவகாரம் காரணமாக அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருமானம் குறைந்தமை தொடர்பில் சி.ஐ.டி. யினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# விமலுக்கு நோட்டீஸ்



பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மற்றும் அவர் சார்பில் நீதிமன்றில் முன்னிலையாகிய பிணையாளர்களை புதன்கிழமை (13) நீதிமன்றில் முன்னிலையாகுமாறு, நோட்டீஸ் அனுப்ப கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க செவ்வாய்க்கிழமை (12) உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## "படுகொலையாளிகளுக்கு எதிராக நடவடிக்கை இல்லை"



பொருளாதார படுகொலையாளிகள் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் சட்டவாட்சிக் கோட்பாடு மீதான நம்பிக்கை கேள்விக்குள்ளாக்க பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பியான எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



### இராணுவத்தினரிடம் இருக்கும்

## மக்களின் காணிகளை விடுவிக்கவும்

" மட்டக்களப்பு-காயன்கேணி பிரதேசத்தில் புதிதாக ஒரு காணியினை இராணுவம் தன் வசப்படுத்த திட்டம்

மட்டக்களப்பில் இராணுவத்தினரிடம் மக்களின் பல காணிகள் காணப்படுகின்றன. இவற்றினை விடுவிக்க ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளேன் என தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பியான இரா.சாணக்கியன் அவற்றை உங்களிடமும் முன்வைக்கின்றேன் என்றார்.

நீங்கள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருக்கும் காலப்பகுதிக்குள் இக்காணிகளை

தொடர்ச்சி P2



### பிரான்ஸில் திருவள்ளுவர் சிலையை

## செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்

வொரெயால் தமிழ் கலாசார மன்றத்தின் ஏற்பாட்டில் செர்ஜி பிரான்ஸில் இடம்பெற்ற திருவள்ளுவர் திருவுருவச்சிலை திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துகொண்டு திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தின் அமைச்சர் லக்ஷ்மி நாராயணன், பிரான்ஸிக்கான இந்தியத் தூதுவர் ஜவீட் அஷ்ரப் மற்றும் பல்வேறுபட்ட நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

### மட்டக்களப்பிலும்

## மீண்டும் பொலிஸ் பதிவு

**பொலிஸ் கட்டளைச் சட்டத்தின் 75ஆவது பிரிவிற்கு அமைவாக விண்ணப்பபடிவம்**

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பொலிஸார் மீண்டும் குடியிருப்பாளர்களின் விபரங்களை கோரிய விண்ணப்பபடிவம் ஒன்றை வீடு வீடாக வழங்கி தகவல் சேகரித்து வருகின்றனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் நிலையத்திலுள்ள பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு பொலிஸார் முழுவிபரங்களும் அடங்கிய விண்ணப்பபடிவம் ஒன்றை வழங்கி தகவல்களை பெறும் நடவடிக்கையினை முன்னெடுத்துள்ளனர்.

தொடர்ச்சி P2



### ஓரினச்சேர்க்கையால்

## எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு

அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகரித்து வரும் எச்.ஐ.வி நோயாளர்களின் எண்ணிக்கை தொடர்பில் மாவட்ட சுகாதார அதிகாரிகள் கவலை தெரிவித்தனர்.

அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளரான வைத்தியர் நிமல் ஆரியரத்ன, இந்த வருடத்தில் 19 எச்.ஐ.வி நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும், எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு ஆபத்தான சதவீதத்தில் அதிகரித்து வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "DJ Night க்கு எதிராக வழக்கு தாக்கல் செய்க"



எம்.றொசாந்த்

இரவு நேர இசை நிகழ்வு (DJ Night) என்ற பெயரில் களியாட்ட நிகழ்வுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்த வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன்,

தொடர்ச்சி P2

## புலம்பெயர் அமைப்புகளை வரவேற்க தயார்



உலக தமிழர் பேரவையின் வருகை போலி தேசியம் பேசுகின்ற சில குழுக்களுக்குத் தடையாக இருக்கலாம். ஆனால் எம்மைப் பொறுத்தவரைப் புலம்பெயர் அமைப்புகள் யாரும் வரலாம் அவர்களை வரவேற்க நாம் தயாராகவே இருக்கின்றோம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ் மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஶ்ரீ ரங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாம் வெளிப்படையாக யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலும் அழிவு யுத்தத்தைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வருமாறு இரு தரப்புக்கும் கோரிக்கை விடுத்திருந்தோம். அப்போது இந்த பேரவை என்ன செய்தார்கள் என்பதையும் இவர்கள் சுயவிமர்சனம் செய்ய வேண்டும்.

இன்று வந்தவர்கள் இதே செயற்பாட்டுடன் கடந்த காலங்களில் பங்காற்ற முயற்சித்திருந்தால் அழிவு யுத்தத்தைத் தடுத்திருக்க அழுத்தத்தையாவது கொடுத்திருக்கலாம்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



## வடக்கு, கிழக்கில் பொலிஸ் பயங்கரவாதம்

# “தாண்டவம் ஆடுகின்றது”

நாட்டில் நல்லிணக்கம் பற்றி ஜனாதிபதியிலிருந்து அமைச்சர்கள் வரை பேசுகின்றார்கள். இந்த நாட்டில் இணக்கம் ஏற்படப்போவதாக பல செய்திகள் வருகின்றன. ஆனால் இந்த நாட்டிலுள்ள சாதாரணமானவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு அடைக்கப்படுகின்றார்கள். குறிப்பாகக் கடந்த நவம்பர் 25,26,27ஆம் திகதிகளில் நினைவேந்தல் நிகழ்வுகளில் பங்கேற்ற பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இந்த நாட்டிலுள்ள சட்டம் ஒழுங்கு என்னவென்று யாருக்கும் தெரியவில்லை.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர்களின் பெற்றோருக்கு மதிய உணவு வழங்கியோரை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்வதென்றால் இந்த நாட்டினுடைய ஜனநாயகம் என்ன? இந்த நாட்டில் என்ன நடக்கப்போகின்றது? உங்கள் உதடுகளில் மட்டும்தான் நல்லிணக்கமா?இறந்துபோன தமது உறவுகளை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தக்கூடத் தமிழர்களுக்கு உரித்தில்லையா?தயவு செய்து உங்கள் மன நிலைகளை மாற்றுங்கள்.

எனவே, இவாறான மிலேச்சத்தனமான நடவடிக்கைகளை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். அப்பாவி மக்களின் இயல்பு வாழ்க்கையில் அச்சத்தை உருவாக்காதீர்கள். அது மிகப்பெரும் பாதிப்பை அந்த மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. அச்சத்தோடு வாழும் மக்களைத்தான் நீங்கள் ஆசைப்படுகின்றீர்களா? அவ்வாறானால் நீங்கள் சர்வதேச சமூகத்திற்குச் சொல்லும் செய்தி என்ன?

வடக்கு, கிழக்கில் பொலிஸ் பயங்கரவாதம் தாண்டவம் ஆடுகின்றது. பொலிஸ் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்த அரசினால் முடியவில்லை. பொலிஸார் மிலேச்சத்தனமாகச் செயற்படுகின்றார்கள். ஏன் உங்களுக்கு இவ்வளவு மோசமான இனவாத சிந்தனை? ஏன் நீங்கள் இனவெறியோடு தமிழர்களைப் பார்க்கின்றீர்கள்? திங்கட்கிழமை கூட யாழ். பல்கலைக்கழக மாணவர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கில் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். கொழும்பில் தமிழர்களின் தகவல்களைத் திரட்டுகின்றீர்கள். அப்படியானால் இந்த நாடு யாருக்குச் சொந்தமானது? உங்களுக்கு மட்டும்தான் சொந்தம் என்றால் தமிழர்களை அழித்து விடுங்கள். ஏன் அவர்களைத் தொடர்ந்தும் வஞ்சிக்கின்றீர்கள்? நல்லளிணக்கமேன் உதட்டளவில் பேசி சர்வதேசத்தை ஏமாற்றிக்கொண்டு இவ்வாறான விடயங்களைக் கையாளாதீர்கள். தயவு செய்து தமிழ் மக்கள் நிம்மதியாக வாழ ஒரு வழியை ஏற்படுத்துங்கள்

கொழும்பு மாவட்டத்திலுள்ள பல்வேறு பிரதேசங்களிலும் தமிழர்கள் வாழ்கின்ற பகுதிகளில் தமிழர்களைக் கணக்கெடுத்தல், அவர்களின் விபரங்களை பதிவு செய்தல் என்ற விடயம் நாட்டின் சிவில் நிர்வாகத்திற்கு முரணாக நடைபெறுவதைத் திங்கட்கிழமை இந்த சபையிலே மனோகணேசன் எம்.பி. தெரிவித்திருந்தார். கொழும்பை மையப்படுத்தி வாழ்கின்ற தமிழர்களும் எம்மிடம் முறையிட்டார்கள். காலை அல்லது மாலை நேரங்களில் பொலிஸார்சிங்களத்தில் மட்டும் உள்ள விண்ணப்பப் படிவங்களைக்கொண்டு வந்து எங்களிடம் தருகின்றார்கள் இதனை பூர்த்தி செய்து விட்டு நாளை இரவுக்குள் தாருங்கள் அல்லது நாங்கள் வந்து இரவு எடுக்கின்றோம் என்று கூறுகின்றார்கள் என மக்கள் எம்மிடம் தெரிவித்தனர்.

நாட்டில் தற்போது சனத்தொகை கணக்கெடுப்பு நடக்கின்றது. அது எல்லாக் கிராமங்களிலும் எல்லா இடங்களிலும் நடைபெறுகின்றது. அது ஏன் கொழும்பு மாவட்டத்துக்கு மட்டும் பொலிஸார் அந்தக் கணக்கெடுப்பில் ஈடுபட வேண்டும்? இது கணக்கெடுப்பு திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம் இந்த விடயங்களைக் கையாளுகின்றபோது நாட்டினுடைய சிவில் விடயமாக நடைமுறையில் உள்ளதொரு விடயம்.

ஆனால், கொழும்பில் உள்ள தமிழர்கள் யார், யார் எங்கெங்கு இருக்கின்றார்கள், அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அறிவதற்குச் சிங்கள பொலிஸார் அல்லது இராணுவத்தினரைப் பயன்படுத்தி சிங்களத்தில் படிவங்களைக்கொடுத்து இந்த விபரங்களை எடுக்க வேண்டிய தேவை ஏன் வந்தது? இதனை உடனடியாக நிறுத்தி நீங்கள் இந்த நாடு பூராக எவ்வாறு இந்த கணக்கெடுப்பு நடைபெறுகின்றதோ அதேவகையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்தக்கோரிக்கையைக் கொழும்பு வாழ் தமிழர்கள் சார்பில் இங்கு நான் முன் வைக்கின்றேன் என்றார்.

## “DJ Night க்கு எதிராக வழக்கு...

அனுமதியின்றி நடத்தப்பட்ட நிகழ்வுக்கு எதிராக யாழ். மாநகர சபை வழக்கு தொடர வேண்டுமென, கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊடகங்களுக்கு திங்கட்கிழமை (11) கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இரவு நேர இசை நிகழ்வு (DJ Night) என்ற பெயரில் களியாட்ட நிகழ்வொன்று, யாழ். மாநகர சபையின் அனுமதியையும் மீறி மீளவும் நடத்தப்பட்டதாக அறிகிறோம். இவ்வாறாக சமூகத்தைச் சீரழித்து வருமானம் உழைப்பதை இவர்கள் கைவிடவேண்டும். இதற்கு எதிராக நாம் போராட வேண்டிய சூழல் வரும் என்றார்.

குறித்த நிகழ்வுக்கு யாழ். மாநகர சபையிடம் அனுமதி கோரப்பட்டு நிராகரிக்கப்பட்ட நிலையில் அந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டுள்ளது. இது சட்டவிரோதமான செயற்பாடு. இதற்கு எதிராக மாநகர சபை நடவடிக்கை எடுக்க முடியும். அனுமதியின்றி நடாத்தப்பட்ட நிகழ்வுக்கு எதிராக யாழ். மாநகர சபை வழக்கு தொடர வேண்டும் என்றார்.

குறித்த விடயத்தில் சமூக நலனில் அக்கறை கொண்ட அனைவரும் ஒன்று திரண்டு எமது எதிர்ப்பை காட்டவேண்டும். மிகவிரைவில் இதற்கான எதிர்ப்பை பதிவு செய்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஓரினச்சேர்க்கையால் எச்.ஐ.வி தொற்று அதிகரிப்பு

ராஜரத வித்யா அறக்கட்டளை ஏற்பாடு செய்த கருத்தரங்கில் உரையாற்றிய அவர், இந்த ஆண்டு நவம்பர் மாதத்திற்குள் பத்து நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றார்.

“பல அரச சார்பற்ற நிறுவனங்கள் எச்.ஐ.வி-பொசிட்டிவ் வழக்குகளைக் கண்டறிய எங்களுக்கு உதவுகின்றன. புள்ளிவிவரங்களின் பகுப்பாய்வு நோயாளிகளின் அதிகரித்து வரும் சதவீதத்தைக் குறிக்கிறது. நோயாளிகளை அடையாளம் காண 41 சிகிச்சையகம் (clinic) ஏற்பாடு செய்துள்ளோம். நோயாளிகளில் பெரும்பான்மையானவர்கள் ஆண்கள். ஆண்களின் இந்த அதீத அதிகரிப்புக்கு ஓரினச்சேர்க்கை உறவுகள் காரணமாக இருக்க வேண்டும்” என்று அவர் கூறினார்.

இந்நிகழ்வில், பாலின நோய்களுக்கான மருத்துவ நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் ரஜரட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்களான அசித்த மளவியராச்சி மற்றும் சுசித் சிறிவர்தன ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.




## தப்பியோடிய 102 கைதிகளும் கைது

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்திலிருந்து திங்கட்கிழமை (11) கைதிகள் சிலர் தப்பியோடியதை அடுத்து, தேடுதல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இருதடவைகள் பாதுகாப்பு வேலியை உடைத்துக் கொண்டு, தப்பியோடியவர்களைக் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகியவர்களைக் கைது செய்து புனர்வாழ்வுக்காக நீதிமன்ற உத்தரவுக்கமைய சுமார் 500 மேற்பட்டோர் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் சம்பவ தினமான திங்கட்கிழமை (11) மாலை பாதுகாப்பு வேலியை உடைத்து 50 கைதிகள் தப்பியோடியதையடுத்து அவர்களை பொலிஸாருடன், இராணுவத்தினர் இணைந்து கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து அன்றைய தினம் இரவு 7 மணியளவில் 80 பேர் மீண்டும் பாதுகாப்பு வேலியை உடைத்துத் தப்பியோடிய நிலையில் இரவிரவாக இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து இரு சம்பவங்களிலும் தப்பியோடிய 130 பேரையும் கைது செய்துள்ளனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்கள் தங்களுக்கு புனர்வாழ்வு நிலையத்தில் கட்டுப்பாடுகள் அதிகம் எனவே, இங்கு இருக்கமுடியாது தங்களைச் சிறைச்சாலையில் அடைக்குமாறு கோரியே இவர்கள் அங்கிருந்து தப்பியோட முயற்சித்ததாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## விமலுக்கு நோட்டீஸ்

விமல் வீரவன்சவுக்கு எதிராக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு தொடர்பாக பிரதிவாதி சமர்பித்த ஆரம்ப ஆட்சேபனைகள் மீதான உத்தரவு செவ்வாய்க்கிழமை (12) பிறப்பிக்கப்படவிருந்தது.

அப்போது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சவேந்திர பெர்னாண்டோ, நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்த போது, தமது கட்சிக்காரர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக, இன்று (12) காலை 9 மணியளவில் தனக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

அத்துடன், விமல் வீரவன்சவின் பிணையாளர்கள் நீதிமன்றில் ஆஜராகாதமை தொடர்பில் அவதானம் செலுத்திய நீதிபதி, அவரது உடல் நிலை குறித்த மருத்துவ அறிக்கையை நாளை (இன்று) நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் விமல் வீரவன்ச சுமார் 75 மில்லியன் ரூபாய் பணம் மற்றும் சொத்துக்களை வைத்திருந்தாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் இந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## இராணுவத்தினரிடம் இருக்கும் மக்களின் காணிகளை விடுவிக்கவும்

மக்களுக்கு கையளிக்க மற்றும் விடுவிக்க கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோனிடம் கோரிக்கை விடுத்தார்பா.

ராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) விசேட கூற்றொன்றை முன்வைத்த போதே இவ்வாறு கோரிக்கை விடுத்த அவர் மேலும் கூறுகையில்,

குருக்கள்மட இராணுவ முகாம் பற்றி நாம் மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடி அதில் ஒரு பகுதியளவில் விட்டுத் தருவதாக உறுதி அளித்துள்ளார்கள். அதனை நீங்கள் துரிதப்படுத்தி தரவேண்டும் . அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் காயன்கேணி பிரதேசத்தில் புதிதாக ஒரு காணியினை இராணுவம் தன் வசப்படுத்தும் திட்டம் உள்ளதாக அறிந்தோம். அதே போல் பாலையடி வெட்டை இராணுவ முகாமில் ஒரு பகுதியை அந்த ஊர் மக்கள் மலசல கூடம் அமைப்பதற்காக கேட்கின்றார்கள்.

எனவே, இவற்றுக்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மட்டக்களப்பில் இவ்வாறாக பல காணிகள் காணப்படுகின்றன. இவற்றினை விடுவிக்க ஜனாதிபதியிடம் பல கோரிக்கைகள் முன்வைத்துள்ளேன் அவற்றை உங்களிடமும் முன்வைக்கின்றேன். நீங்கள் இராஜாங்க அமைச்சராக இருக்கும் காலப்பகுதிக்குள் இக் காணிகளை மக்களுக்கு கையளிக்க கூடியதாக மற்றும் விடுவிக்க கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனை உங்களிடம் கோரிக்கையாக முன்வைக்கின்றேன். என்றார். இதற்கு பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், இது தொடர்பில் இரு வாரங்களில் ஒருதீர்மானத்தை அறிவிக்கின்றேன் என்றார்.

## மட்டக்களப்பிலும் மீண்டும் பொலிஸ் பதிவு

பொலிஸ் பிரிவில் வசிக்கும் குடியிருப்பாளர்கள் மற்றும் தங்கியிருப்பவர்களின் விபரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பபடிவம் 1865ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச்சட்டத்தின் 75ஆவது பிரிவிற்கு அமைவாக செயல்படும் ஆணை எனும் தலைப்பில் விண்ணப்பபடிவம் வழங்கப்பட்டுள்ளது.

## முட்டை விலை எகிறியது

வெள்ளை முட்டை ஒன்று 59-60 ரூபாவாகும் என்ற சில்லறை விலையிலும் விற்கப்படுகிறது.

முதல் முட்டை விலை அதிகரித்துள்ளதால் சில்லறை விலையில் முட்டை விலையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக முட்டை மொத்த வியாபாரிகள் தெரிவித்தனர்.

## அதிகாரிகள் சிலரை சாடினார் ஜனாதிபதி

செலவுத்- திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய ஜே .வி. பி.தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க, குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.

நிலக்கரி, எரிபொருள் கொள்வனவில் மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.மோசடி செய்தவர்கள் ஜனாதிபதியின் அமைச்சரவையில் உள்ளார்கள். பூநகரி மின்னுற்பத்தி திட்டத்தில் 500 மெகாவோட் அலகை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்த நாடு என்ன ஆட்சியாளர்களின் சொத்தா ? எனக்கேள்வி எழுப்பினார்

இதற்கு எழுந்து பதிலளித்த ஜனாதிபதியும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமான ரணில் விக்ரமசிங்க, கிளிநொச்சி - பூநகரியில் 20 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இதற்கான புதிய மின்திட்டங்களுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மின் கொள்கை தொடர்பில் 2013ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன. புதிய திட்டங்கள் சிறந்த முறையில் முன்னெடுக்கப்படும்

அதேவேளை, அமைச்சர்கள் மாத்திரமல்ல ஒருசில அரச அதிகாரிகளும் பணம் சம்பாதிப்பதற்காக முறையற்ற வகையில் செயற்படுகிறார்கள் என்றார்.

## போலி ஸ்டிக்கர்: சி.ஐ.டி விசாரணை

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) வாய் மூல விடைக்கான வினா நேரத்தில் புத்திக்கபத்திரன எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், மதுபான போத்தலில் போலி ஸ்டிக்கர் மேன்முறையீட்டுக் குழு மற்றும் நீதிமன்றம் வரை சென்ற விவகாரம். நிதியமைச்சு தனியான குழுவொன்றை நியமித்து அதன் மூலம் இதற்கான தீர்மானம் ஒன்றை மேற்கொண்டது. அதில் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியமைச்சு உரிய நடவடிக்கை எடுக்கும். அதனை சபையில் சமர்ப்பிக்கவும் முடியும்.

புதிய ஸ்டிக்கர் அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் கலால் திணைக்களத்தின் வருமானம் அதிகரித்துள்ளது என்பதைக் குறிப்பிட வேண்டும். அந்த வகையில் அதில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எமக்கு பல வழிகள் உள்ளன.இந்த விடயத்தில் மறைப்பதற்கு எதுவும் கிடையாது .நேர்மையான விதத்திலேயே அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

## “படுகொலையாளிகளுக்கு எதிராக நடவடிக்கை இல்லை”

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (12) இடம்பெற்ற 2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் முதலீட்டு மேம்பாட்டு மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவற்றுக்கான செலவுத் தலைப்புக்கள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில்,

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள் நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. வரி கொள்கையால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். நடுத்தர மக்கள் தமது அன்றாட தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதை நாங்கள் தடுக்கவில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அப்பால் சென்று அரசாங்கம் செயற்படுகிறது. நடுத்தர மக்களை நெருக்கடிக்குள்ளாக்குமாறு வரி விதிக்க நாணய நிதியம் குறிப்பிடவில்லை. ஊழல் மோசடியை இல்லாதொழித்து அரச வீண் செலவுகளைக் குறைக்குமாறு குறிப்பிட்டது. ஆனால் இந்த யோசனைகள் செயற்படுத்தப்படவில்லை.

வசதியுள்ளவர்கள் வரி அறவிடுவதற்கு எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. 904 பில்லியன் வரி வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேசிய இறைவரித் திணைக்களம் முறையாகச் செயற்படவில்லை. இவ்வாறான நிலையில் வெளிநாட்டு முதலீடுகளை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும். எனக்கேள்வி எழுப்பினார்.

## புலம்பெயர் அமைப்புகளை வரவேற்க தயார்

ஆனாலும், காலம் கடந்து தாயகத்துக்கு வந்து இவ்வாறு அக்கறை கொண்டதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அது மட்டுமல்லாது அவர்கள் அரசியல் ரீதியாகவும் விரும்பினால் பங்காற்றலாம்.

உலக தமிழர் பேரவை போல ஏனைய பல அமைப்புகளும் முன்வர ஆர்வமாக இருக்கின்றார்கள். ஆயினும் அவ்வாறு வந்தால் தங்களை புலம்பெயர் தேச ஏனைய அமைப்புகள் துரோகிகள் என கூறுவார்கள் என்ற தயக்கமும் அவர்களிடம் இருக்கின்றது.

இதேநேரம், புலம்பெயர் அமைப்புகள் எமது நாட்டின் அபிவிருத்தியில் ஈடுபட வேண்டும். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும். அதுமட்டுமல்லாது ஜனநாயக தேர்தல் அரசியல் நீரோட்டத்திலும் பங்காற்ற வேண்டும் என்பதே எமது கட்சியின் நோக்கமாகும் என்றார்.

# “பாதியில் நிறுத்தியுள்ள திட்டங்களை பூர்த்தி செய்க”

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் ஒருங்கிணைந்த (I Road செயற்திட்டங்கள்) வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பாதியில் நிறுத்தியுள்ள அனைத்து கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களையும் உடனடியாக முடிக்க வேண்டும் என கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் (I Road செயற்திட்டங்கள்) தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் அந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (12) செத்சிறிபாய, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சகத்தில் இடம்பெற்ற போது இதனை கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து துரிதமாக பணிகளை முடிக்குமாறு ஒன்றிணைந்த (I Road செயற்திட்டங்கள்) வீதி அபிவிருத்தித் திட்டத்தின் திட்டப் பணிப்பாளருக்கு இராஜாங்க அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.



மேலும், பணிகள் நிறைவடைந்துள்ள வீதிகளில் வீதி அடையாளங்கள், பெயர் பலகைகளை நிறுவுதல், வீதிகளில் வெள்ளைக் கோடுகள் மற்றும் பாதசாரிகள் கடக்கும் அடையாளங்கள் போன்ற பணிகளை துரிதமாக முடிக்க செயற் திட்ட பொறியியலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

இந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில், பாராளுமன்ற உறுப்பினர்களான டி.வீரசிங்க, கபில அதுகோரல, கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளர் பி.ரணவீர, ஒருங்கிணைந்த வீதி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகள் குழு ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.



# ஊடகவியலாளருக்கு மரண–அச்சுறுத்தல்

■ எம். றொசாந்த்

யாழில் ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு கும்பல் ஒன்று சென்று மரண அச்சுறுத்தல் விடுத்துள்ளதாகக் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது

கல்வியங்காட்டு பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டுக்கு திங்கட்கிழமை (11) மாலை, முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த 06 பெண்கள் உள்ளிட்ட 20 பேர் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, குறித்த ஊடகவியலாளரைத் தாக்க முற்றப்பட்டபோது, அயலவர்கள் கூடியமையால், தாக்குதலைக் கைவிட்டு மரண அச்சுறுத்தல் விடுத்து அங்கிருந்து சென்றுள்ளதாகப் பாதிக்கப்பட்டவர் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல் கும்பல் தொடர்பான செய்தி ஒன்று இணையத்தள ஊடகம் ஒன்றில் வெளியாகி இருந்த நிலையில், அதனை அகற்ற கோரி மிரட்டியதாக தெரிவித்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# திண்மக் கழிவு முகாமைத்துவம் 2024இல் ஆரம்பமாகும்

கொழும்பு பெருநகரம் தொடர்பான திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம் அரச மற்றும் தனியார் பங்களிப்புடன் அடுத்த வருடம் நடைமுறைப்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை நிறைவு செய்வதற்காக இவ்வருட வரவு-செலவுத் திட்டத்தில் 5,500 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இத்திட்டத்தின் நிர்மாண பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் 31ஆம் திகதி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. செயற்திட்ட செயற்பாட்டாளர்களுக்கான பயிற்சிக்காக அடுத்த வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரை 03 மாத காலப்பகுதிக்கு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் பணித்தளத்தில் தங்கியிருக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

புத்தளம், அருவக்காலு பகுதியில் உள்ள கைவிடப்பட்ட குழிகளுடன் சுகாதார கழிவுகளை அகற்றும் வசதி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு ஆகியவற்றை நிர்மாணிக்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. களனி மற்றும் புத்தளத்தில் 02 கழிவுப் பரிமாற்ற நிலையங்களை நிர்மாணிப்பதும் அது தொடர்பான புகையிரத உட்கட்டமைப்பு மற்றும் வீதி அமைப்பும் இதன் கீழ் நிர்மாணிக்கப்படும்.



கொழும்பு பெருநகரத்தைச் சுற்றி சேகரிக்கப்படும் 1200 மெற்றிக் தொன் குப்பைகளை களனி குப்பை பரிமாற்ற நிலையத்திற்கு கொண்டு வருவதற்கு முதலில் திட்டமிடப்பட்டது, அது சுருக்கப்பட்டு கொள்கலன் பெட்டிகளில் அடைக்கப்பட்டு, புகையிரதத்தில் கொண்டு செல்லப்பட்டு அருவக்காலுவில் சுகாதாரமான முறையில் அகற்றப்பட்டது. ஆனால் தற்போது மேல்மாகாணத்தில் உள்ளூராட்சி மன்றங்களால் அகற்றப்படும் எஞ்சிய கழிவுகள் அனைத்தும் சுகாதாரமான முறையில் அகற்றப்படும் வகையில் இந்த வசதிகள் கட்டப்பட்டு வருகின்றன என்றார்.

# புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பம் கோரல்

அடம்ஜீ லுக்மன்ஜீ நினைவு நிதி Adamjee Lukmanjee Memorial Fund (ALMF) 22ஆம் ஆண்டு வருடாந்த புலமைப்பரிசில்கள் வழங்குதலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நாடளாவிய ரீதியில் கடுமையான பொருளாதார சிரமத்துக்கு மத்தியில் கல்வி கற்று 2023 வருட பரீட்சையில் உயர் சித்திகளைப் பெற்ற, க.பொ.த. சாதாரண தரப் பிள்ளைகளின் உயர் கல்விக்காக மாதாந்த நிதியுதவி வழங்குதலுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

விண்ணப்பதாரரால் தயாரிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்களுடன் கூடிய சுயவிபர படிவம், 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த சாதாரணதரப் பரீட்சையின் முடிவு பட்டியல் (பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட), குறைந்த வருமானம் கொண்ட குடும்பமாக நிரூபிக்கும் கிராம உத்தியோகஸ்தர் சான்றிதழ், பிரதேச செயலாளரால் உறுதிப்படுத்தப்பட்ட) நிதியுதவி அவசியம் என பெற்றோர்/பாதுகாவளர் எழுதப்பட்ட விண்ணப்ப கடிதம், (பெற்றோர்/பாதுகாவளரின் தொலைபேசி இலக்கங்களுடன்) விண்ணப்படிவங்கள் பெறப்படும்.


இறுதி திகதி: 15/01/2024

மேலே குறிப்பிடப்பட்ட தகுதிகலை பூர்த்திசெய்த விண்ணப்படிவங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

செயலாளர், அடம்ஜீ லுக்மன்ஜீ நினைவு நிதி,
141/5 கிராண்ட்பாஸ் வீதி,
கொழும்பு 14.

தொ.இல: 0112 445 421

மேலதிக தகவல்களுக்கு:
சம்பிக - 077 3786210,
மதுர - 071 1612199,
தக்ஷலா - 077 3421317,
மினோஷ் - 077 7340798



# சாரதிக்கு எதிராக விசனம்

■ பாறுக் ஷிஹான்

நீண்ட நேரமாக கைத்தொலைபேசியை பார்த்துக்கொண்டு அரச பேருந்தை ஓட்டிச் சென்ற சாரதியின் காணொளி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது.

இச்சம்பவம் வட மாகாணத்தில் கிளிநொச்சி வவுனியா வழியாகப் பயணத்தை மேற்கொள்ளும் அரச பேருந்தொன்றில் திங்கட்கிழமை (11) இடம்பெற்றுள்ளது.

அதிகளவான மக்கள் பொதுப் போக்குவரத்தை நம்பி பயணம் செய்கின்ற நிலையில் அண்மைக்காலமாக சாரதிகளின் கவனயீனம் காரணமாகப் பல உயிர்கள் பல்வேறு பகுதிகளில் பலியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.




# நிகழ்வுகளுக்கு ஏற்பாடு

■ பாறுக் ஷிஹான்

சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை பிராந்திய அலுவலகம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (19) காலை 9 மணி முதல் 12 மணி வரை நடைபெறும்.

இந்நிகழ்வு கல்முனை பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் மனித உரிமைகள் பற்றிய விடயங்களையும் ஆணைக்குழுவின் பொது வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகள் தொடர்பான விழிப்பூட்டல்களும் வழங்கப்படவுள்ளன.

# போதைப்பொருடன் எலிசபெத் கைது

கொலன்னாவ பிரதேசத்தை மையப்படுத்தி கிபுலலே குணா என்ற நபரின் போதைப்பொருள் கடத்தலுக்குத் தலைமை தாங்கும் எலிசபெத் என்ற 48 வயதுடைய பெண், 07 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் இலத்திரனியல் தராசொன்றுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரால், வெல்லம்பிட்டிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீதொட்டமுல்ல லேன், வீதியில் திங்கட்கிழமை (11) சுற்றிவளைப்பொன்றை மேற்கொண்டபோதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# பல்கலைக்கழக மாணவன் கஞ்சாவுடன் கைது

■ எம்.றொசாந்த்

யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கஞ்சா போதைப்பொருளுடன் கோப்பாய் பொலிஸாரினால் திங்கட்கிழமை (11) கைது செய்யப்பட்டுள்ளார்.


பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மாணவனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பெண்ணின் சடலம் மீட்பு

■ எச். எம்.ஹேவா

ஹட்டன் - நோர்வூட் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட எல்பட மேற்பிரிவு தோட்டத்தில் உள்ள கால்வாயில் இருந்து பெண்ணொருவரின் சடலம் திங்கட்கிழமை (11) மீட்கப்பட்டதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



அந்த தோட்டத்தில் வசித்து வந்த சுமார் 80 வயது மதிக்கத்தக்க முத்து வீரம்மன் என்பவருடைய சடலமே இவ்வாறு மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண், கடந்த சில நாட்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து காணாமல் போயுள்ளதாக உயிரிழந்தவரின் உறவினர் தெரிவித்ததாகவும், இந்த மரணம் தொடர்பில் நோர்வூட் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



# தபாலகங்கள் மூடங்கின

■ ஷாஜஹான்

தபால் ஊழியர்களின் பணிபகிஸ்கரிப்பு காரணமாக நீர்கொழும்பு பிரதான தபாலகம், கொச்சிக்கடை பிரதான தபாலகம் உட்பட உப தபாலகங்கள் இரண்டாவது நாளாக செவ்வாய்க்கிழமை (11) மூடப்பட்டிருந்தன.

இதன் காரணமாக தபாலக சேவைகள் முடங்கியதுடன், தபாலகத்திற்கு வந்தவர்கள் ஏமாற்றத்தோடு திரும்பிச் செல்வதைக் காணக்கூடியதாக இருந்துள்ளது.

# தவறான கொள்கைகளால் வ(லி)ரிகளை சுமந்து வரும் புத்தாண்டு

பெரும்பான்மை பலத்துடன் தெரிவாகிய அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தான்தோன்றித் தனமான தீர்மானங்களின் காரணமாக கடந்த ஆண்டு பொது மக்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

இதன் தாக்கம் இன்னமும் தொடர்ந்து வரும் நிலையில், தலைநிமிர்த்த முனையும் பொது மக்கள் மீது மீண்டும் மீண்டும் சுமைகளைச் சுமத்துவது இந்த அரசாங்கத்தின் வழமையாகிவிட்டது.

2022ஆம் ஆண்டைத் தொடர்ந்து, 2023ஆம் ஆண்டின் இறுதி சில தினங்களைக் கடந்து கொண்டிருந்த நிலையில், கடந்த சில தினங்கள் 2024ஆம் ஆண்டுக்காக பொது மக்கள் பெருமளவில் எதிர்பார்த்திருந்த தீர்க்கமான வற் வரி திருத்தம் தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டது. இதுவரையில் 15 சதவீதமாகவுள்ள வற் வரியை, 18 சதவீதமாக உயர்த்துவதற்கும், புதிதாக வற் வரி விதிப்பனவை எரிபொருள்கள், மின்சாதனங்கள், அத்தியாவசியப் பொருட்கள் போன்றன அடங்கலாக மரணித்த உடலை எரிப்பதற்கு அல்லது புதைப்பதற்கான கட்டணங்களின் மீதும் வற் வரி அறவிடுவது வரை பல்வேறு பொருட்கள் மீது விதிக்கப்பட்டு, அதற்காகப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவும் பெறப்பட்டது.

அரசாங்கத்தின் அதிகரிக்கும் செலவுகளை ஈடுகட்டுவதற்காக இந்த வரி விதிப்பனவு மேற்கொள்ளப்படுவதாக அரச தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. அரச செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்கான எவ்விதமான நடைமுறை சாத்தியமான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதாகத் தெரியவில்லை.

உதாரணமாக இலங்கை மின்சார சபை, எரிபொருள் வளத் துறை போன்றன தொடர்ச்சியாக நட்டத்தை எதிர்கொண்டு வரும் துறைகளாகப் பல வருடங்களாகப் பேசப்பட்டு வருவதுடன், அவற்றின் விலைகளும் கட்டுக்கடங்காத வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஆசியப் பிராந்தியத்தில் மிகவும் உயர்வான மின்சார கட்டணம் நிலவும் நாடுகளில் இலங்கை முன்னிலையில் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்க, இந்த அரச ஸ்தாபனங்களை மறுசீரமைப்பது தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. குறிப்பாக மின்சார சபையை மறுசீரமைப்பு செய்வது தொடர்பில் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்த பிரேரணை, பிற்போடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து சனிக்கிழமை மாலை நாடு முழுவதும் இருளில் மூழ்கியமையும் கவனிக்கத்தக்கது. இதற்கு மின் வழங்கல் கட்டமைப்பில் மின்னல் தாக்கம் ஏற்பட்டதாகக் காரணமும் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விநியோகத்திற்காக வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கை வரவுள்ளன, அவை வந்ததும் விலைகள் குறையும் போன்ற பல கருத்துகள் முன்வைக்கப்பட்டாலும், சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை தொடர்ச்சியாகக் குறைந்த காலப்பகுதியிலும், இலங்கையில் விலை அதிகரித்த சூழல் கடந்த சில மாதங்களாகக் காணப்பட்டது.

மக்கள் மீது சுமையேற்றும் செயற்பாடுகளால் வெறுப்படைந்துள்ள மக்களை மேலும் பள்ளத்தில் தள்ளிவிடும் வகையில் அரசாங்கத்தின் 2024ஆம் ஆண்டுக்கான இந்த வற் வரி அதிகரிப்பு அமைந்துள்ளது.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது. எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

நன்றி -பருத்தியூர் பாலை. வயிரவநாதன்



எம்.எஸ்.எம். ஐயூப்

# மனித உரிமை பிரகடனம் ஒரு பயனற்ற ஆவணம்

ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி சர்வதேச மனித உரிமை தினம் கொண்டாடப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையே இவ்வருட சர்வதேச மனித உரிமை தினம் கொண்டாடப்பட்டது.

இவ்வருடம் இந்த நாள் இரண்டு காரணங்களுக்காக மிகவும் முக்கியத்துவம் பெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை மனித உரிமை தொடர்பான உலகளாவிய பிரகடனத்துக்கு (Universal Declaration of Human Rights) 75 வருடங்கள் பூர்த்தியாகியது. அத்தோடு பலஸ்தீன் மண்ணில் காசாவில் உலகமே பார்த்திருக்க எவ்வித தடையுமின்றி இஸ்ரேல் வரலாற்றில் மிகக் கொடூரமான போர்க் குற்றங்களைப் புரிந்து வருகிறது. அங்கு மனித உரிமை பட்டப் பகலில் காலில் போட்டு மிதிக்கப்படுகிறது. உலகம் செய்வதறியாது பார்த்துக்கொண்டு இருக்கிறது.

கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி முதல் காசாப் பகுதியில் சுமார் 18,000 சாதாரண மக்கள் இஸ்ரேலின் வான் குண்டுத் தாக்குதல்களாலும் தரைவழித் தாக்குதல்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களுள் சுமார் 7000 சிறுவர்களும் அடங்குகிறார்கள். ஆயிரக்கணக்கான பாரிய கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. அந்த இடிபாடுகளுக்குள் மேலும் ஆயிரக்கணக்கானோரின் சடலங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. மருத்துவமனைகள், பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் தாக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. அகதி முகாம்களாவது விட்டுவைக்கப்படவில்லை. அவற்றிலும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொடுமை மேலும் தொடர்கிறது.

காசா மக்களுக்கான உணவு, தண்ணீர், மருந்து, எரிபொருள் ஆகிய அனைத்துக்கும் இஸ்ரேல் தடைவிதித்துள்ளது. இத்தனை நடக்கும்போது, மனித உரிமை பிரகடனத்தைக் கையில் வைத்துக்கொண்டு கைக்கட்டிப் பார்த்துக் கொண்டு இருக்க உலகில் சமாதானத்தை நிலைநாட்டவென உருவாக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் சபை நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது.

ஏனைய நாடுகளில் மனித உரிமைகளை வலியுறுத்தும் அமெரிக்காவின் வெளிப்படையான வெட்கமில்லா ஒத்துழைப்பிலேயே உலகின் மிகக் கொடூரமான இந்த மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வருகின்றன.

காசாவில் நடைபெறுவதைச் சிலர் இஸ்ரேல்-ஹமாஸ் போர் என்று அழைக்கின்றனர். காசாவில் நடைபெறுவது யுத்தமல்ல. எப்போதாவது ஒரு சாரார் குண்டொன்றை எரிய, மற்றைய சாரார் இராப்பகலாக வான்வழித் தாக்குதல் நடத்தி ஆயிரக்கணக்கான சாதாரண மக்களைக் கொன்று குவிப்பதைப் போர் என்று அழைக்க முடியாது. வல்லரசுகளின் ஒத்துழைப்பில் ஒரு இனத்தை நோக்கிய ஒருதலைபட்ச கண்மூடித்தனமான தாக்குதல் மூலமான இன ஒழிப்பே அங்கு நடைபெறுகிறது.

இது பத்து வீதத்துக்கும் குறைந்த யூத மக்கள் வாழ்ந்த பலஸ்தீனில் அம்மக்களை வெளியேற்றி அங்கு யூதர்களுக்கான நாடொன்றை அமைக்கப் பல மேற்குலக நாடுகளின் உதவியுடன் 1917ஆம் ஆண்டு பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் ஆத்தர் பல்பர் (Arthur Balfour) வரைந்த திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதாகும். அதற்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அக்காலத்திலிருந்தே யூத மக்களை பலஸ்தீனில் கொண்டு வந்து குடியேற்ற ஆரம்பித்தது.

1940களில் ஐரோப்பாவில் பல நாடுகளில் இன வேற்றுமையின் அடிப்படையில் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்ட யூதர்களும் பலஸ்தீனுக்கு கொண்டு வரப்பட்டார்கள். அவ்வாறு வந்த யூதர்களும் சுதேச மக்களைத் தாக்கி அவர்களது காணிகளைப் பறித்தார்கள். 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் பிரகடனப்படுத்தப்பட்டது. அரபு நாடுகள் அதனை எதிர்த்துப் படையெடுத்தபோது, மேற்குலக நாடுகளின் பாரிய ஒத்துழைப்பில் அது முறியடிக்கப்பட்டது. அதன் மூலமும் மேலும் நிலம் பறிக்கப்பட்டது. 70 இலட்சம் பலஸ்தீன மக்கள் பலஸ்தீனிலிருந்து அகதிகளாக வேறு நாடுகளுக்கு விரட்டப்பட்டார்கள்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன் என்ற இரு நாடுகள் அம்மண்ணில் அமைய வேண்டும் என்று ஐ.நா. பிரேரணை நிறைவேற்றியது. ஆனால், பலஸ்தீன் என்ற நாடு ஒருநாளும் உருவாகவில்லை. பலஸ்தீனில் அமைந்த இஸ்ரேல் என்ற நாட்டின் எல்லைகளுக்கு அப்பாலுள்ள பகுதிகளையும் இஸ்ரேல் அரசாங்கமே கட்டுப்படுத்தி வந்தது, வருகிறது. அதிலும் ஜோர்தான் நதியின் மேற்குக்கரையில் பலஸ்தீனர்கள் வாழ்ந்த பகுதிக்குள்ளும் நூற்றுக் கணக்கான இஸ்ரேலிய குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. அது இன்றும் தொடர்கிறது.

இனவழிப்பும் காணி பறிப்பும் தொடர்ந்தது. 1967ஆம் ஆண்டு அரபு நாடுகள் இந்தக் கொடுமைகளை எதிர்த்த போது போர் வெடித்தது அமெரிக்கா மற்றும் மேற்குலக உதவியில் இஸ்ரேல் அரபு நாடுகளைத் தோற்கடித்தபோது, அந்நாடுகளின் நிலங்களும் கைப்பற்றப்பட்டன. அவற்றில் சில பகுதிகள் மீண்டும் அந்நாடுகளிடம் கையளிக்கப்பட்டன. ஆனால், பலஸ்தீன மக்களிடம் பறிக்கப்பட்ட நிலம் இஸ்ரேலுடன் இணைத்துக் கொள்ளப்பட்டன. 1973ஆம் ஆண்டும் இதே நடந்தது. மேலும் ஒரு பகுதி நிலம் பறிக்கப்பட்டது.

பலஸ்தீன மக்கள் தொடர்ந்து இம்சிக்கப்பட்டு வந்தார்கள். அதற்கு எதிராக ஒரு காலத்தில் யஸீர் அரபாத்தின் தலைமையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆயுதப் போராட்டம் இடம்பெற்றது. அப்போதும் அந்த எதிர்ப்பு நடவடிக்கைகளைப் பாவித்து மென்மேலும் நிலம் பறிக்கப்பட்டு யூத குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. 1994ஆம் ஆண்டு அமெரிக்கத் தலையீட்டில் அரபாத்துக்கும் இஸ்ரேலிய பிரமதர் யிடஷாக் ரபீனுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. ஆயினும் இஸ்ரேல் தமது விஸ்தரிப்பு நடவடிக்கைகளை நிறுத்தவில்லை.

எனவே, தான் இவ்வருடம் ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பின் தாக்குதல்கள் வெறுமைக்குள் இடம்பெறவில்லை என்று அண்மையில் ஐ.நா. செயலாளர் நாயகம் அண்டோனியோ குட்டரேஸ் கூறியிருந்தார். கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸின் தாக்குதலை அடுத்தும் அதனைப் பாவித்து இஸ்ரேலியப் படையினர் மக்களைப் பகிரங்கமாகக் கொன்று குவிக்கிறார்கள். அத்தாக்குதல்களில் பெரிதாக ஹமாஸ் உறுப்பினர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேலியர்கள் கூறுவதில்லை.

பல்பர் பிரகடனத்தின் படி, பலஸ்தீனை முழுமையாக விழுங்கும் திட்டத்தின் மற்றொரு கட்டமாகும். ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸின் தாக்குதல் இடம்பெறாவிட்டாலும் இதற்காக இஸ்ரேலியர்கள் ஏதாவது காரணத்தைத் தேடிக் கொள்வார்கள். அல்லது நிர்மாணித்துக் கொள்வார்கள்.

அத்தனையும் அமெரிக்காவின் பகிரங்க உத்தியுடனேயே மேற்கொள்ளப்படுகிறது. ஏனெனில் இது பல்பர் திட்டத்தின் நீட்சியாகும். இம்முறை இஸ்ரேலிய தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டவுடன் வெளிச்சக்திகள் தலையிடும் என்பதற்காக அமெரிக்க மத்தியதரைக் கடலுக்கு போர்க் கப்பல்களை அனுப்பியது. பாரிய கட்டிடங்களைத் தகர்க்க நாசக்கார ஏவுகணைகளை அமெரிக்காவே வழங்கி வருகிறது. அமெரிக்கா இஸ்ரேலுக்கு பல பில்லியன் டொலர் நிதி உதவி மற்றும் இராணுவ உதவியும் வழங்கியிருக்கிறது. எனவே, பலஸ்தீனில் கொல்லப்படும் ஒவ்வொரு உயிருக்கும் அமெரிக்கத் தலைவர்களும் பொறுப்பை ஏற்க வேண்டும்.

ஒக்டோபர் மாதம் ஹமாஸின் தாக்குதல் வெறுமைக்குள் இடம்பெறவில்லை. நீண்டகால நிலப் பறிப்பு மற்றும் கொடுமைகளின் விளைவே அது என்று ஐ.நா. செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரேஸ் கூறினார். இஸ்ரேலின் தாக்குதல்களானது சிறுவர்கள் மீதான போர் என்று காசாவுக்கான யுனிசெப் பேச்சாளர் ஜேம்ஸ் எல்டர் கூறினார். ஐ.நா. நிறுவனங்கள் அனைத்தும் போர் நிறுத்தத்தைக் கோருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை போர் நிறுத்தம் தொடர்பான பிரேரணையொன்று ஐ.நா. பாதுகாப்புச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டபோது, அமெரிக்கா அதற்கு எதிராக வீட்டோ அதிகாரத்தைப் பாவித்து அது நிறைவேறுவதைத் தடுத்தது. எனவே ஐ.நாவும் அதன் உறுப்பு அமைப்புக்களும் இருந்து என்ன பயன் என்ற கேள்வி எழுகிறது.

தமது நாட்டை பறித்தவர்களுக்கு எதிராக பாதிக்கப்பட்ட மக்கள் சிறியதோர் தாக்குதலை நடத்தினாலும் உலகம் அதனைப் பயங்கரவாதம் என்கிறது. ஆனால், நாட்டை பறித்தவர்கள் வல்லரசுகளின் உதவியுடன் அப்பாதிக்கப்பட்ட மக்களில் பல்லாயிரக்கணக்கானோரை கொன்று குவிக்கும்போது, அதே உலகம் அது பாதுகாப்புக்கான உரிமை என்கிறது.

போரின்போது சாதாரண மக்கள் கூட்டுத் தண்டனைக்கு உள்ளாக்குவது சட்ட விரோதம் என்கிறார்கள். ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்திலிருந்து சாதாரண மக்களை வெளியேற்றுவது சட்ட விரோதம் என்கிறார்கள். மருத்துவமனைகள், பாடசாலைகள் போன்றவற்றைத் தாக்குவது சட்டவிரோதம் என்கிறார்கள். பொது மக்களுக்கான உணவு, தண்ணீர், மருந்து போன்றவற்றின் விநியோகத்தைத் தடுத்து அவற்றை ஆயுதமாகப் பாவிப்பது சட்ட விரோதம் என்கிறார்கள். ஆனால், அவை அனைத்தும் காசாவில் இடம்பெறுகிறது.

இத்தனைக்கும் உதவி அளிக்கும் அமெரிக்காவுக்கோ மேற்குலகுக்கோ இனிமேலும் உலகில் ஏனைய இடங்களில் மனித உரிமைகளைப் பற்றிப் பேச தார்மிக உரிமை இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. அவ்வாறு பேசினாலும், அந்நாடுகளின் தலைவர்கள் மேற்குலகின் இரட்டை வேடத்தைச் சுட்டிக்காட்டி தமது கொடுமைகளை நியாயப்படுத்துவர். ஏற்கனவே இலங்கைத் தலைவர்கள் காசாவுக்கும் இலங்கைக்கும் இரண்டு விதிகள் ஏன் என்ற மேற்குலகைப் பார்த்துக் கேட்கிறார்கள். செயலாற்றுத் திறன் கொண்ட மனிதர்களும் மனித அமைப்புக்களுமின்றி சமயங்களோ சட்டங்களோ அல்லது பிரகடனங்களோ ஆசாரக்கோவைகளோ உலகில் நீதியை நிலைநாட்டவோ மனிதனின் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாமளிக்கவோ போவதில்லை என்பது தற்போது நிரூபனமாகிவிட்டது.

## கடிதங்கள்

### குஞ்சுக்கோடாலி கல்லு குளத்துக்கு ஆபத்து

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் கமநல சேவைப்பிரிவின் கீழ் உள்ள குஞ்சுக்கோடலிக்கல்லு குளம் ஆபத்தான நிலையில் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது மழைபெய்து கொண்டிருப்பதால் குளத்திற்கான நீர்வரத்து அதிகமாகக் காணப்பட்டுள்ளதால் குளம் வான் பாயத் தொடங்கியுள்ளது.

சியாப் திட்டத்தின் கீழ் 35 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைக்கப்பட்ட இந்த குளம் தொடர்பில் குளத்தின் புனரமைப்பு சரியான கண்காணிப்பு இல்லாத நிலையில், விவசாயிகளால் பல தடவைகள் சம்மந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. தற்போது மழை, வெள்ளம் அதிகமாகக் காணப்படுவதால் குளத்தின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.


குளத்தின் நீர் திறக்கும் கொண்டு ஒன்றின் ஒரு பகுதி தாழ் இறங்கியுள்ளதுடன், புதிதாகப் போடப்பட்ட குளக்கட்டின் மண் அணைகளும் வெடிப்புடன் காணப்படுகின்றது. இதனால் குளத்திற்கு ஆபத்தான நிலை ஏற்படும் என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது காலபோக நெற்செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள், யானை காவலுக்காக வயலுக்கு செல்கின்றார்கள். இந்த குளம் உடைப்பெடுக்கும் அபாய நிலை காணப்படுகின்றது என்றும் இதனால் விவாயிகளுக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

செ.கீதாஞ்சன்



# யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை



துரைநாயகம் சஞ்சீவன்

சர்வதேச மனித உரிமைகள் தினம் ஆண்டு தோறும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. இரண்டாம் உலகமகா யுத்தம் நடைபெற்றபோது நடந்த சொத்து இழப்பு, படுகொலைகள், அட்டூழியங்கள் மற்றும் மனிதப் பேரழிவுகளின் பின்னர் தோன்றிய ஐக்கிய நாடுகள் சபையால் அறிவிக்கப்பட்டதே இந்த மனித உரிமைப் பிரகடனமாகும்.

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க முடியாத, மறுக்க முடியாத உரிமைகளை மனித உரிமைகள் என்று அழைக்கிறோம். மனித உரிமைகள் என்பது யாராலும் உருவாக்கப்பட்டதல்ல, அதுபோல் மனித உரிமைகள் எவராலும் வழங்கப்பட்டதும் அல்ல. எனவே ஒருவரின் உரிமையைப் பறிக்க எவருக்கும் உரிமையில்லை.

1945ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை உருவான அடுத்தாண்டு, பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி ஐக்கிய நாடுகள் ‘மனித உரிமை ஆணைக் குழு’ உதயமானது. ஐம்பத்து மூன்று நாடுகளை அங்கமாகக் கொண்ட இக்குழு, முதல் வேலையாக ‘சர்வதேச மனித உரிமைப் பிரகடனத்தை உருவாக்குவதற்கு அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் ஒரு குழுவை அமைத்தது.

இக்குழுவின் சிபாரிசின் படி 30 பிரிவுகளின் கீழ் மனித உரிமைகள் இனங்காணப்பட்டு அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் ஐக்கிய நாடுகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. டிசம்பர் 10, 1948ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச்சபையினால் இந்தப் பிரகடனத்திற்கு 58 நாடுகள் அங்கீகாரம் வழங்கியது. டிசம்பர் 10 என்ற இதே நாளை 1950ஆம் ஆண்டிலிருந்து ‘சர்வதேச மனித உரிமைகள் தினமாக’ அறிவித்துக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகத்தில் பிறக்கும் எல்லா மனிதர்களும் சமமான உரிமைகளும், அடிப்படைச் சுதந்திரங்களும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையைத்தான் இந்த நாளில் உலகம் உரத்துக் கூற வேண்டியுள்ளது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதை அனைத்து தரப்பினருக்கும் வலியுறுத்தும் வகையிலும், மனித உரிமைகள் தொடர்பான விடயங்களை மக்களுக்குத் தெளிவுபடுத்தும் நோக்கத்துடனும் இந்த தினம் உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படுகிறது.

மனித உரிமைகள் பற்றிய கருத்து மேலை நாடுகளில் பிறக்கவில்லை என்பதை வரலாற்றாசிரியர்களும் அறிஞர்களும் வெளிப்படுத்துகிறார்கள். பண்டைய கிரீஸ் மற்றும் ரோமில் அதன் தோற்றத்தைப் பலர் கண்டறிய முயற்சிக்கின்றனர். இருப்பினும், ‘சைரஸ் மனித உரிமைகள் சாசனம்’ 1878இல் பாபிலோன் நகரில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டுபிடிக்கப்பட்டதையே இன்று உலகின் முதல் மனித உரிமைகளின் முதல் பிரகடனமாகக் கருதுகின்றனர்.

கி.மு 539 ஒக்டோபர் 4இல், ஈரானிய (பாரசீக) வீரர்கள் அப்போது ஈராக் தலைநகரான பாபிலோனுக்குள் நுழைந்தனர் (பாபிலோனியா). இந்த இரத்தமில்லாத போர் பாபிலோனில் தலைமுறை தலைமுறையாக அடிமைகளாக இருந்த அனைவர்களையும் விடுவித்தது என்று கூறப்பட்டது. நவம்பர் 9ஆம் திகதி ஈரானின் சைரஸ் அரசர் (பாரசீகம்) பாபிலோனுக்குச் சென்று, ‘மனித உரிமைகளின் சைரஸ் சாசனம்’ என்று அழைக்கப்படும் சுடப்பட்ட களிமண் பீப்பாயில் (சிலிண்டர்) பொறிக்கப்பட்ட ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.

ஈரானில் முகமது ரெசா பலாவி என்று அழைக்கப்படும் ஷா அரசர் காலத்தில், சைரஸ் சிலிண்டர் பிரபலமடைந்தது. 1968ஆம் ஆண்டு தெஹ்ரானில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது மனித உரிமைகள் மாநாடு நடைபெற்ற வேளையில் ஈரான் அரசனான ஷா ‘சைரஸ் சிலிண்டர் மனித உரிமைகளின் நவீன உலகளாவிய பிரகடனத்தின் முன்னோடி’ என்று அறிவித்தார். இன்றும், இங்கிலாந்தில் லண்டனில் உள்ள பிரிட்டிஷ் கண்காட்சி கூடத்தில் இது காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமை பிரகடனம் அல்லது சாசனம் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையால், பாரிஸில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அன்றிலிருந்து இந்த நாள் ‘சர்வதேச மனித உரிமைகள் தினமாக’ உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

சர்வதேச மனித உரிமை பிரகடனம் அல்லது சாசனம் முப்பது சாரங்களைக் கொண்டுள்ளது. சாரம் 1 மற்றும் 2இன் தத்துவக் கோரிக்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றன. மேலும் மனிதர்கள் சமமான கண்ணியத்தில் சுதந்திரமாகப் பிறக்கிறார்கள் மற்றும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுக்கு உரிமையுடையவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன. சாரம் 3 முதல் 21 வரையிலான குடிமை மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் சாரம் 22 முதல் 27 வரை பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிக் கூறுகின்றன. 28 மற்றும் 29 சாரம்களின் முடிவு ஜனநாயக சமூகத்தில் தனிநபரின் கடமைகள் மற்றும் பொறுப்புகளை வலியுறுத்துகிறது. இறுதியாக, சாரம் 30இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை அழிக்கும் நோக்கில் எதையும் செய்ய ஒரு நபர் அல்லது குழுவிற்கு எந்த உரிமையும் உள்ளது என்று விளக்கப்படக்கூடாது என்று எச்சரிக்கை அறிவிப்பு கொடுக்கிறது.

## 1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ‘சர்வதேச மனித உரிமைகள் சாசனம்’

1. சமத்துவ உரிமை - சகல மனிதர்களும் சுதந்திரமாகப் பிறக்கின்றனர். அவர்கள் பெறுமானத்திலும், உரிமைகளிலும் சமமானவர்கள், அவர்கள் நியாயத்தையும், மனசாட்சியையும் இயற்பண்பாகப் பெற்றவர்கள்.
2. ஏற்றத்தாழ்வுகள் காட்டப்படாமல் இருப்பதற்கான உரிமை - இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் மற்றும் தேசிய அல்லது சமூகம், பிறப்பு அல்லது பிற அந்தஸ்துகளால் வேறுபடுத்த முடியாமல் உலகில் உள்ள மனிதர்கள் எல்லோரும் சம உரிமை பெற்றவர்கள்.
3. சுதந்திரமாகவும் பாதுகாப்பாகவும் வாழும் உரிமை அனைவருக்கும் உண்டு.
4. யாரையும் அடிமையாக நடத்த எவருக்கும் உரிமை இல்லை.
5. சித்திரவதைக்கு, மனிதத் தன்மையற்ற தாக்குதல்களுக்கும் உள்ளாகாமல் இருப்பதற்கான சுதந்திரம்.
6. சட்டத்தின் முன் அனைவருக்கும் சம உரிமை
7. பாரபட்சம் எதுவுமின்றி சட்டத்தின் பாதுகாப்புக்கும் எல்லோரும் உரித்தானவர்கள்.
8. ஒருவரின் உரிமை மதிக்கப்படாதபோது சட்ட உதவியை நாடும் உரிமை.
9. சட்டத்துக்கு புறம்பாக ஒருவரை காவலில் வைக்கவோ, நாடு கடத்தவோ யாருக்கும் உரிமை இல்லை.
10. நீதியான, பகிரங்கமான விசாரணைக்கான உரிமை
11. குற்றஞ்சாட்டப்படுவோர், குற்றம் நிரூபிக்கப்படும் வரை நிரபராதி என நிரூபிக்க வாய்ப்பு வழங்கும் உரிமை.
12. தனிப்பட்ட அல்லது அந்தரங்க விடயத்தில் எவரும் தலையிடாமல் இருப்பதற்கான சுதந்திரம்.
13. ஒவ்வொரு நாட்டிற்குள்ளும் சுதந்திரமாக நடமாடுவதற்கும், நாட்டை விட்டு வெளியேறவும், திரும்பி வரவும் உரிமை.
14. ஆபத்து காலத்தில் பிற நாட்டில் தஞ்சம் கேட்க உரிமை உண்டு.
15. ஒவ்வொரு பிரஜைக்கும் தங்கள் விருப்பத்திற்கு ஏற்ற தேசிய இனத்தை மாற்றிக்கொள்ள உரிமை.
16. எந்த ஆணும், பெண்ணும் விரும்பினால், திருமணம் செய்துகொண்டு பாதுகாப்புடன் குடும்பம் நடத்துவதற்கான உரிமை. சமுதாயத்தாலும், அரசாலும் இது பாதுகாக்கப்பட வேண்டும்.
17. சொத்து வைத்துக்கொள்ளும் உரிமை. தனியாகவும், கூட்டாகவும் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.
18. சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சிச் சுதந்திரம், மதச் சுதந்திரம் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு.
19. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் எவருக்கும் உண்டு. எவ்வழிவகைகள் மூலமும், எல்லைகள் இன்றி தகவலையும் கருத்துக்களையும் நாடுவதற்கும், பெறுவதற்கும் பரப்புவதற்குமான சுதந்திரம்.
20. எந்த ஒரு கூட்டத்திலும் கலந்துகொள்ள, சங்கத்தில் உறுப்பினராக யாருக்கும் உரிமை உண்டு
21. அரசியல் உரிமை - அரசாங்கத்தில், சுதந்திரமான தேர்தலில் பங்குபெறவும், பொதுச்சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிமை. ஒவ்வொருவருக்கும் தத்தம் நாட்டிலுள்ள அரசாங்க சேவையில் சமமான முறையில் அமர்த்தப்படுவதற்கு உரிமையுண்டு.
22. சமூகப் பாதுகாப்பிற்கும், தன் திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உரிமை
23. ஒவ்வொருவரும் விரும்பிய தொழில் செய்யவும், வேறுபாடு எதுவுமின்றி, சமமான தொழிலுக்குச் சமமான சம்பளம் பெறுவதற்கு உரிமை கொண்டவர்கள். ஒவ்வொருவருக்கும் தொழிற்சங்கம் அமைக்க உரிமை. அவற்றில் சேர்வதற்கும் உரிமையுண்டு.
24. இளைப்பாறுவதற்கும், ஓய்வெடுக்கவும் உரிமை.
25. ஒவ்வொருவரும் உணவு, உடை, இருப்பிடம், மருத்துவக் காப்பு, அவசியமான சமூக சேவைகள் உட்பட தமது குடும்பத்தினாலும், உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் போதுமான வாழ்க்கைத்தரத்துக்கு உரிமை உடையவர். அத்துடன், வேலையின்மை, இயலாமை, கைம்மை, முதுமை காரணமாகவும் அவை போன்ற அவரது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட பிற சூழ்நிலை காரணமாகவும் வாழ்க்கை வழியில்லாமை ஏற்படும் சந்தர்ப்பங்களில் பாதுகாப்பு பெறவும் உரிமை உண்டு. தாய்மை நிலையும் குழந்தைப் பருவமும் விசேஷ கவனிப்பு மற்றும் உதவியை பெற உரிமை கொண்டவை.
26. ஒவ்வொருவருக்கும் கல்வி கற்பதற்கான உரிமையுண்டு. குறைந்தது ஆரம்ப அடிப்படைக் கட்டங்களிலாவது கல்வி இலவசமாக இருத்தல் வேண்டும்.
27. சமுதாயத்தின் பண்பாட்டு வாழ்க்கையில் சுதந்திரமாகப் பங்குகொள்வதற்கும், கலை மற்றும் அறிவியல் முன்னேற்றத்திலும், அதன் நன்மைகளிலும் பங்கெடுப்பதற்கும் எவருக்கும் உரிமையுண்டு.
28. மனித உரிமைகளை உறுதிசெய்யும் சமூக அமைப்புகளில் பங்குபற்றும் உரிமை.
29. ஒவ்வொருவரும் பிறரது உரிமையை மதிக்க வேண்டும்.
30. இந்த பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள எந்த ஒரு உரிமையையும் ஒருவர் பெறுவதற்கு தடையாக இருக்க உரிமை கிடையாது.

இலங்கையில் மனித உரிமை தினம் ஒவ்வொரு வருடமும் வந்து செல்கிறது. ஆனால் சர்வதேச மனித உரிமை பிரகடனம் இலங்கையில் ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறதா? 2009 மே மாதப் போரின் இறுதி நாட்களில் கொல்லப்பட்ட மற்றும் காணாமல் போனவர்களுக்காக விசாரணை மற்றும் பொறுப்புக்கூறல் அடிப்படையில் அரசாங்கம் என்ன செய்துள்ளது? யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கில் இன்று என்ன நடக்கிறது? யுத்தம் முடிவடைந்து பதினான்கு வருடங்களுக்குப் பின்னரும் நில அபகரிப்பு, கட்டாய மத நினைவுச் சின்னங்களை நிறுவுதல், கட்டாயக் குடியேற்றம் மற்றும் பல அழிவுகள் வடக்கு மற்றும் கிழக்கில் தற்பொழுதும் தொடர்கின்றன.

தென்னாபிரிக்காவின் முன்னாள் தலைவர் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை உலக அரசுகளிற்கு ஓர் அருமையான உதாரணமாக இருந்து வருகிறது. எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள ஒரு மக்கள் எவ்வாறு எண்ணியல் சிறுபான்மையினரை திருப்திப்படுத்தலாம், மற்றும் இணைந்து வாழலாம் என்பதை உலகுக்கு முன்னுதாரணமாக விளங்கியவர் நெல்சன் மண்டேலா.



# ஓர் ஆளுமை

“நீங்கள் நடந்து செல்லும் பாதையில் எவ்விதமான தடைகளும் இன்றி, முன்னேறிக்கொண்டே செல்கின்றீர்கள் என்றால், யாரோ ஒருவர் மிக ஆழமாக காலூண்டி பயணித்த அடிச் சுவட்டின் மீது கால்களை மிக மெதுவாக வைத்துக்கொண்டு செல்கின்றீர்கள், உங்களுக்கு எவ்விதமான சவால்களுக்கு முகங்கொடுக்க முடியாது. திராணியற்றவர்களாகவே பயணிப்பீர்கள், இறுதியை எட்டுவதற்குள் சவாலுக்கு முகங்கொடுத்துவிட்டீர்கள் என்றால், ஒரேயடியாகக் கீழே விழத்தான் வேண்டும் வேறு வழியில்லை”

கண்டி பெண்கள் உயர்தர பாடசாலையில் தரம் எட்டில் கற்றுக்கொண்டிருந்த கிருபாகரன்-காஞ்சனாதேவியின் புதல்வி, 2022/2023 கல்விப் பொதுத் தராதர சாதாரணத் தரப்பரீட்சைக்குத் தோற்றிச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுக்கொண்டார்.

எனினும், அச்சிறுமி முகம் கொடுத்த சவால்கள் கொஞ்சம் நஞ்சமல்ல, தன் மீதும் தன்னுடைய பெற்றோர் மீதும் அப்பட்டமாகச் சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கவேண்டுமென்ற வெறியோடு, மிகவேகமாக நிதானமாகப் பயணித்தமையால், இந்த வெற்றியிலக்கை செல்வி கிறிஸ்டின் பிரணகேஷினியால் எட்டமுடிந்துள்ளது என்பது மட்டுமே உண்மை.

கடந்துவந்த பாதையில் இடையூறுகளை ஏற்படுத்தியவர்கள், கிறிஸ்டின் பிரணகேஷினியின் வெற்றியைக் கொண்டாடும் மனப்பான்மையில் இல்லை. அதனால்தான், வாழ்த்துக்களைக் கூட கழற்றி எறியும் நிலைமைக்குச் சென்றுள்ளனர் என்பதெல்லாம் திரைமறைவில் அரங்கேற்றப்படும் மிகவும் அபத்தமான நாடகமாகும்.

பாடசாலையில் கேள்விகளைக் கேட்கும் அச்சிறுமிக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன. பாடசாலைக்குள் தீர்க்கவேண்டிய பிரச்சினையை பொலிஸ் நிலையத்துக்குள் இழுத்துவிட்டமையால், விவகாரம் மனித உரிமை மீறல் ஆணைக்குழு வரைக்கும் சென்று விட்டது.

விசாரணையின் நிறைவில், அம்மாணவி நிரபராதியெனத் தீர்ப்பளிக்கப்பட்டது எனினும், ”இம்மாணவி மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளார். மாணவிக்குப் புரிதலின்மை ஏற்பட்டுள்ளது. அதேவேளை, ஆசிரியர்கள் தொடர்பில் மாணவிக்குத் தப்பான அபிப்பிராயம் உருவாகியுள்ளது” என மாணவியைப் பார்க்காமல் ,மாணவியுடன் ஒரு வார்த்தையேனும் கதைக்காமல் சகோதர மொழி கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஒருவர் எழுத்து மூலமாகத் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் பயிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் என்னதான் உறுதுணையாக இருந்தாலும், அவர்களின் கல்வி,விளையாட்டு, ஏனைய செயற்பாடுகள் தொடர்பிலான முழுமையான கவனத்தையும் பெற்றோர்களே கொண்டிருப்பர். அந்தவகையில், கிறிஸ்டின் பிரணகேஷினி பெற்றோர்களான தாய்,தந்தை இருவரும் பட்டதாரி ஆசிரியர்கள், அவர்கள் பாடசாலை நிர்வாகத்தால், தங்களுடைய மகளுக்குக் கொடுக்கப்பட்ட நெருக்கடிக்காகத் தட்டிக்கேட்கத் தொடங்கினர்.

இதனால், அம்மாணவி பாடசாலையிலிருந்து தட்டிக்கழிக்கப்பட்டாள், தன்னை கழித்துவிட்டனர் என்ற எவ்விதமான மன தாக்கத்தையும் கொண்டிராத கிறிஸ்டின் பிரணகேஷினி, பெற்றோர்களின் வழிகாட்டலுடன், எட்டாம் தரத்திலேயே 2022/2023 கல்விப்பொதுத் தராதர சாதாரண தரத்தில் பரீட்சை எழுதி, 1 A, 3B, 5 C சித்திகளைப் பெற்று, (சமயம் A, தமிழ்மொழியும் இலக்கியமும் B, ஆங்கிலம் B , விஞ்ஞானம் B , தமிழ் இலக்கிய நயம் C, சிங்களம் C, சுகாதாரம் C, வரலாறு C, கணிதம் C) உயர்தரத்துக்கு தகுதிபெற்றுள்ளார்.

கல்வியில் மட்டுமன்றி, விளையாட்டுகளிலும் கடும் கெட்டிக்காரி, கண்டி திருத்துவ கல்லூரியில் உயர்தர கணிதப் பிரிவில் கல்விப்பயிலும் அண்ணா, கிருபாகர் கிருஷ்டி ஹரிகிஷனை போல, சிறு வயது முதலே சதுங்கரத்தில் பல பதக்கங்களைத் தனதாக்கிக்கொண்ட கிறிஸ்டின் பிரணகேஷினி.

7 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான வயதுப் பிரிவில் தரம் 1இல் பங்குபற்றி இலங்கை பள்ளிகளுக்கு இடையே தேசிய சாம்பியன், தரம் 1, இல் 7 வயதுக்குட்பட்ட, 2வது மேற்காசிய அதிவேக சதுரங்க சாம்பியன் இது இலங்கையில் நடைபெற்றது. 7 வயதிற்குப்பட்டவர்களுக்கிடையிலான ஆசியப் பாடசாலை சாம்பியன்ஷிப்_ ஈரானில் நடைபெற்றது. இதில் பங்கேற்பு. 8 வயதிற்குட்பட்ட, (தரம் 2) இலங்கை தேசிய இளைஞர்கள் கழக சதுரங்க சாம்பியன்ஷிப் பில் இரண்டாம் ரன்னர் பெற்றார். அதுமட்டுமன்றி, காரத்தே_ ஷோடோகன் பிரவுன் பெல்ட், கிக் குத்துச்சண்டை - பழுப்பு பெல்ட், குங் ஃபூ - ஊதா நிற பெல்ட் பெற்றுக்கொண்டார்.

தற்போது கணினி, கொரியன் மொழி, ஆங்கிலம் என்பவற்றில் டிப்ளோமாவை தொடருகின்றார்.

ஆசிரியர்களில் பலர், தங்களை நம்பியே வரும் மாணவர்களை இனங்காணத் தவறிவிடுகின்றனர். கடும் திறமையான மாணவர்களுக்குத் தேவையில்லாத பட்டங்களைக் கட்டி ஒதுக்கிவிடுகின்றனர். எனினும், கிறிஸ்டின் பிரணகேஷினியின் பெற்றோர் இருவரும் தங்களுடைய மகளாகப் பார்க்காது. ஆசிரியர்களாக இருந்து திறமைகளை இனங்கண்டு, சரியான பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்துள்ளனர்.

தன்னுடைய பிள்ளைகளுக்கு மட்டுமன்றி, தங்களிடம் கற்கும் மாணவர்களுக்கும் மனமுவர்ந்து உதவிச்செய்வதில் அவர்களுக்கு நிகர், அவர்களே, எனினும், காய்க்கிற மரங்கள்தான் கல்லடிப்படும். அவற்றையெல்லாம் கிறிஸ்டின் பிரணகேஷினியின் பரீட்சை பெறுகள் சுக்குநூறாக்கிவிட்டன.




அவுஸ்திரேலியா

## கடினமாகும் குடியேற்ற விதிகள்

அவுஸ்திரேலியா செல்ல விண்ணப்பிக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அந்நாட்டுக் குடிமக்களுக்குப் பல பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக அந்நாட்டு ஊடகங்களில் கருத்துக்கள் வெளியாகி வந்தது.

இது தொடர்பில் அவுஸ்திரேலய உள்துறை அமைச்சர் க்ளேர் ஓ நெய்ல் (Clare O'Neil) புதிய குடியேற்றச் சட்டதிட்டங்கள் குறித்து அறிவித்துள்ளார். அதில், "கடந்த ஜூன் 2023 வருட கணக்கின்படி 5 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் நாட்டிற்குள் குடியேறியுள்ளனர். பழைய குடியேற்ற சட்ட விதிகளில் ஏராளமான குளறுபடிகள் உள்ளன. எனவே, ஒரு பெரும் மாற்றம் தேவைப்பட்டது. அவுஸ்திரேலியாவிற்குள் குடியேறுவோர் எண்ணிக்கை இனி படிப்படியாக குறைக்கப்பட்டு 2025 ஜூன் மாதத்திலிருந்து தற்போது உள்ள அனுமதி 50 சதவீதத்திற்கும் குறைவாக மாற்றப்படும் என்றார்.



இஸ்ரேல்

## "இலக்கை அடைந்த பின்னர் போர் முடிவடையும்"

ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக இஸ்ரேல் இராணுவம் போர் பிரகடனம் செய்து காசா மீது கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாக தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ்- இஸ்ரேல் இடையே போர் நிறுத்தம் தேவை என உலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், இஸ்ரேல் இராணுவ அமைச்சர் யோவ் காலன்ட், "காசாவில் ஹமாஸ்க்கு எதிரான போர், எங்களுடைய இலக்கை அடைந்த பின்னர் முடிவுக்கு வரும். காசாவின் வடக்கு முனையில் ஹமாஸின் ஜபாலியா, ஷெஜையா பட்டாலியன் அகற்றப்படும் தருவாயில் உள்ளது. அமெரிக்கா கேட்கும் மற்றும் சொல்லும் அனைத்தையும் நான் கருத்தில் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.



பெங்களூரு

18 ஆண்டுகளாக தலையில் இருந்த


## தோட்டாவை நீக்கி சாதனை

18 ஆண்டுகளுக்கு முன்பு, நபரொருவரின் தலையைத் துளைத்துக் கொண்டு சென்ற 3 சென்றி மீற்றர் அளவுள்ள தோட்டா அறுவைகிசிச்சை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனை மருத்துவர்கள் இந்த அறுவைசிகிச்சையை வெற்றிகரமாகச் செய்து முடித்துள்ளனர்.

யேமனை சேர்ந்த நபரொருவருக்கு மண்டை ஓட்டை துளைத்துக்கொண்டு சென்ற துப்பாக்கித் தோட்டாவால், கடுமையான தலைவலி மற்றும் காதிலிருந்து நீர் ஒழுகும் பிரச்சினையால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

யேமனில் உள்ள ஒரு சின்ன கிராமத்தைச் சேர்ந்த இவர் தனது 6 சகோதரர்கள், 3 சகோதரிகளுடன் வசித்து வந்துள்ளார். ஒருநாள், அவர்கள் வாழ்ந்து வந்த பகுதியில் இரு தரப்பினருக்கு இடையே நடந்த சண்டையில் இவரது தலையை துப்பாக்கி தோட்டா துளைத்துவிட்டது. அதனையடுத்து உடனடியாக மருத்துவமனைக்குச் சென்றபோது அங்கு முதலுதவி மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது.



ஆர்ஜென்டினா

## புதிய ஜனாதிபதியாக ஜேவியர் மிலே

ஆர்ஜென்டினா நாட்டில் நவம்பர் 19ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் செர்ஜியோ மாசா, ஜேவியர் மிலே ஆகிய இருவரும் போட்டியிட்ட நிலையில் இந்த தேர்தலில் ஜேவியர் மிலே வெற்றி பெற்றுள்ளார்.

இவர் தொலைக்காட்சி விவாதத்தில் நெறியாளராக பணியாற்றியபோது, அரசியல்வாதிகளிடம் எழுப்பிய கடுமையான கேள்விகளால் பொதுமக்கள் மத்தியில் மிகவும் பிரபலமானார். இதன் மூலம் தேர்தலில் வெற்றி பெற்று நாட்டின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்றார்.

பதவியேற்றபின் போது உரையாற்றிய அவர், நாட்டை மறு கட்டமைப்பு செய்யப்போவதாக அறிவித்தார். நாட்டின் மோசமான பொருளாதார நெருக்கடியை சரி செய்ய கடுமையான நடவடிக்கைகளை எடுக்க உள்ளதாகவும், இது தவிர்க்க முடியாதது என்றும் கூறினார்.

பின்னர் ஜேவியர் மிலே தனது முதல் ஆணையில் கையெழுத்திட்டுள்ளார். அதில், அமைச்சகங்களின் எண்ணிக்கையை 18 இருந்து 9ஆக குறைத்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. ஜேவியர் மிலே பிரசாரத்தின்போது கலாச்சாரம், சுற்றுச்சூழல், பெண்கள் மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகங்களை அகற்றுவதாக உறுதியளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





மத்தியப்பிரதேசம்

மத்தியப் பிரதேசத்தின்

## புதிய முதல்வர் மோகன் யாதவ்

மத்தியப் பிரதேச மாநிலத்தின் புதிய முதல்வராக மோகன் யாதவ் தேர்ந்தெடு க்கப்பட்டுள்ளார். போபாலில் திங்கட்கிழமை (11) நடைபெற்ற பாஜக எம்.எல்.ஏக்கள் கூட்டத்தில் முதல்வராக அவர் தெரிவு செய்யப்பட்டார். இதையடுத்து, முதல்வர் சிவராஜ் சிங் சவுகான் தனது பதவியை இராஜினாமா செய்தார்.

மத்தியப் பிரதேசத்தில் பா.ஜ.கவின் முகமாக அறியப்பட்டவர் சிவராஜ் சிங் சவுகான். பா.ஜ.க இம்முறை முதல்வர் வேட்பாளரை அறிவிக்காமலேயே தேர்தல் களத்தை எதிர் கொண்டது. தற்போது 3 முறை முதல்வராக இருந்த சிவராஜ் சிங் சவுகானுக்கு முதல்வர் பதவி மறுக்கப்பட்டுள்ளது. அம்மாநில அரசியலில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பா.ஜ.க. எம்.எல்.ஏக்களின் கூட்டத்தில் உஜ்ஜைனியின் தெற்கு எம்.எல்.ஏ. மோகன் யாதவ் (58 வயது) முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

மேலும், துணை முதல்வர்களாக ஜெகதீஷ் தேவ்ரா, ராஜேஷ் சுக்லா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர். மத்தியப் பிரதேச சட்டப்பேரவை தலைவராக முன்னாள் மத்திய அமைச்சர் நரேந்திர சிங் தோமர் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். அதேசமயம், மூன்று முறை முதல்வராக இருந்த சிவராஜ் சிங் சவுகானுக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

புதிய முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறித்து மோகன் யாதவ் கூறும்போது, "நான் கட்சியில் உள்ள கடைமட்ட ஊழியர். மாநிலத் தலைமைக்கும், மத்திய தலைமைக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் அன்புடனும் ஆதரவுடனும் என் பணியை மேற்கொள்வேன்" என தெரிவித்துள்ளார்.

மேலும், மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், சத்தீஸ்கர் சட்டப்பேரவை தேர்தலில் பா.ஜ.க அமோக வெற்றி பெற்றுள்ளது. கடந்த 2018 சட்டப்பேரவை தேர்தலைவிட 3 மாநிலங்களிலும் தற்போது அதிக இடங்களை பா.ஜ.க கைப்பற்றியுள்ளது. தெலங்கானாவில் காங்கிரஸ் 64 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சியை கைப்பற்றியது.




விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத் தொடர்களில்

## திருக்கோவில், பொத்துவில் சம்பியன்களாகின

வி. சுகிர்தகுமார்


விநாயகபுரம் மின்னொளி விளையாட்டுக் கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற கிரிக்கெட் தொடரில் பொத்துவில் பிறீ லயன்ஸும், கால்பந்தாட்டத் தொடரில் திருக்கோவில் குட்நிக்கும் சம்பியனாகின.

மொத்தமாக 44 கழகங்கள் பங்குபற்றிய விலகல் அடிப்படையிலான 8 வீரர்களைக் கொண்ட 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் அக்கரைப்பற்று லீ ஸ்டாரை வென்றே பிறீ லயன்ஸ் சம்பியனாகியது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பிறீ லயன்ஸ் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய லீ ஸ்டார், 6 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 37 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிறீ லயன்ஸ் 5.5 ஓவர்களில் ஆறு விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது.

தொடர்ந்து நடைபெற்ற 30 கழகங்கள் கலந்து கொண்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் மின்னொளியை வென்று குட்நிக் சம்பியனானது. போட்டியின் வழமையான நேர முடிவு வரை இரண்டு அணிகளும் கோல் பெற்றிருக்காத நிலையில், பெனால்டியில் 4-3 என்ற ரீதியில் குட்நிக் வென்றது.

இத்தொடர்களில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை உள்ளிட;ட மாவட்டங்களை சேர்ந்த அணிகள் பங்குபற்றியிருந்தன.




உலக தடகள விருதுகளில்

## நோவா லைல்ஸ், டுப்லாண்டிஸ் தெரிவு

ஆண்டின் உலகத் தடகள வீரராக நெடுந்தூர ஓட்ட வீராங்கனை பெய்த் கிப்யெகொன், குறுந்தூர ஓட்ட வீரர் நோவா லைல்ஸ், கோலூன்றிப் பாய்தல் வீரரான அர்மன்ட் மொன்டோ டுப்லாண்டிஸ், மரதனோட்ட வீராங்கனை டிஜிஸ்ட் அசீஃபா, மரதனோட்ட வீரர் கெல்வின் கிப்டும், முப்பாய்தல் வீராங்கனை யுலிமார் றோஜாஸ் ஆகியோர் நேற்று முன்தினம் பெயரிடப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு விருதுகளானது தடம், களம், அரங்குக்கு வெளியாளெனப் பிரிக்கப்பட்ட நிலையிலேயே இவர்கள் அனைவரும் விருதுகளைப் பெற்றுள்ளனர்.

உலக சம்பியன்ஷிப்பில் 1,500 மீற்றர் மற்றும் 5,000 மீற்றர் ஓட்டங்களை கென்யாவின் கிப்யெகொன் வென்றிருந்தார்.

இதேவேளை, உலக சம்பியன்ஷிப்பில் 100 மீற்றர், 200 மீற்றர் ஓட்டங்களில் வென்றிருந்த ஐக்கிய அமெரிக்காவின் நைல்ஸ், 4x100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் தங்கம் வென்ற ஐக்கிய அமெரிக்க அணியிலும் இடம்பெற்றிருந்தார்.

இந்நிலையில், சுவீடனின் டுப்லான்டிஸும், வெனிசுவேலாவின் றோஜாஸும் உலக சம்பியன்ஷிப்பில் வென்ற நிலையில், எத்தியோப்பியாவின் அசீஃபா பேர்லின் மரதனிலும், கிப்டும் லண்டன் மற்றும் சிக்காக்கோ மரதனில் வென்றிருந்தனர்.




பாடசாலை மாணவருக்கிடையிலான கராத்தே:

## ராகலை பிரகாசிப்பு






அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான இதோசுக்காய் கராத்தே டூ சங்கத்தால் நடத்தப்பட்ட கராத்தே போட்டியில் ராகலை உயர்நிலை பாடசாலை மாணவர்களில் சி.டிலுக்ஸன் காத்தாவில் தங்கப் பதக்கத்தையும், குமித்தேயில் வெண்கலப் பதக்கத்தையும், வை.விதுஸ்னா காத்தாவில் தங்கப் பதக்கத்தையும், என்.திவாசன் காத்தா மற்றும் குமித்தேயில் வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இந்தியாவுக்கெதிரான

## இங்கிலாந்து குழாமில் புதுமுக வீரர்



இந்தியாவுக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்துக் குழாமில் ஷொய்ப் பஷிர் என்ற 20 வயதான புதுமுக சுழற்பந்துவீச்சாளர் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, இன்னொரு சுழற்பந்துவீச்சாளரான டொம் ஹார்ட்லி, வேகப்பந்துவீச்சாளர் குஸ் அட்கின்ஸன் ஆகியோர் முதன்முறையாக டெஸ்ட் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

இக்குழாமில் சகலதுறைவீரர் கிறிஸ் வோக்ஸ் இடம்பெறவில்லை.

குழாம்: பென் ஸ்டோக்ஸ் (அணித்தலைவர்), பென் டக்கெட், ஸக் குறோலி, ஜோ றூட், ஒலி போப், ஹரி ப்றூக், ஜொனி பெயார்ஸ்டோ (விக்கெட் காப்பாளர்), பென் போக்ஸ் (விக்கெட் காப்பாளர்), ஒலி றொபின்ஸன், டொம் ஹார்ட்லி, மார்க் வூட், றெஹான் அஹ்மட், ஷொய்ப் பஷிர், குஸ் அட்கின்ஸன், ஜேம்ஸ் அன்டர்சன், ஜேக் லீச்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 13, டிசெம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.